சாட்சிய வாக்குமூலம்

மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:– திருமதி. இரா. சத்யதாரா, எம்.ஏ., எம்.எல்.,

அமர்வு வழக்கு எண் 88 /2025

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 1 (LW – 1) | நாள் | 17.07.2026 |
| பெயர் | அரவிந்தன் | வயது | 28 |
| தந்தை பெயர் | ஆசைத்தம்பி | ஊர் | மன்னம்பந்தல் |

(குற்றம் சாட்டப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சாட்டப்பட்ட நபர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

சாட்சி அழைக்கப்பட்டு திரு. T. ரவிசங்கர், இருக்கை எழுத்தர் நிலை – 1 என்பவரால் சத்யபிரமாணம் செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை**

நான் மன்னம்பந்தல் கிராமத்தில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியாது. கடந்த வருடம் ஒரு நான் காபி குடிக்க பேருந்து நிலையத்திற்கு சென்றபோது மயிலாடுதுறை போலிசார் விசாரித்தார்கள் என்னிடம் கையெழுத்து கேட்டார்கள் நான் கையெழுத்து போட்டேன். என்னிடம் காட்டப்படும் பேப்பரில் உள்ள கையெழுத்து என்னுடையது இல்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்கவும் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிகோரி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிசார் விசாரணையில் 17.03.2025 தேதியில் மதியம் 12.00 மணிக்கு நானும் விமலும் மயிலாடுதுறை புதிய பேருந்து நிலையத்தில் பேசிக்கொண்டிருந்தபோது மயிலாடுதுறை காவல் நிலைய சார்பு ஆய்வாளர் ஒரு நபர் பேருந்து நிலையத்தில் கத்தியை காட்டி கடைக்காரர்களை மிரட்டியதாக காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்திருப்பதாக எங்களிடம் சொல்லி சம்பவ இடத்தில் அவர்கள் வரைந்த பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்ததற்கு சாட்சியாக இருக்க கேட்டதால் நானும் விமலும் சாட்சி கையெழுத்துபோட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தற்போது எதிரிக்கு பயந்து எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குற்றம் சாட்டப்பட்ட நபர் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

Aravindan

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட ... 
மயிலாடு...

சாட்சிய வாக்குமூலம்
மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.
முன்னிலை:- திருமதி. இரா. சத்யதாரா, எம்.ஏ., எம்.எல்.,
அமர்வு வழக்கு எண் 88 /2025

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 2 (LW –3 ) | நாள் | 17.07.2026 |
| பெயர் | சதீஷ்குமார் | வயது | 41 |
| தந்தை பெயர் | சம்பந்தம் | ஊர் | சங்கரன்பந்தல் |

(குற்றம் சாட்டப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சாட்டப்பட்ட நபர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

சாட்சி அழைக்கப்பட்டு திரு. T. ரவிசங்கர், இருக்கை எழுத்தர் நிலை – 1 என்பவரால் சத்யபிரமாணம் செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது மயிலாடுதுறை காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். 17.03.2025 தேதியில் காலை 9.00 மணிக்கு நானும் முதல் நிலை காவலர் 290, உதவி ஆய்வாளர் பிரியங்கா ரோந்து பணிக்காக மயிலாடுதுறை புதிய பேருந்து நிலையம் அருகே சென்ற போது ஆஜர் எதிரி கையில் கத்தியை வைத்துக்கொண்டு ஆபாசமான வார்த்தைகளால் அங்கிருந்த கடைக்காரர்களையும் பொதுமக்களையும் திட்டிக்கொண்டிருந்தார். SI மேடம் பொது இடத்தில் இப்படி பேசகூடாது பிரச்சனை செய்யகூடாது என்று சொன்னார்கள். ஆஜர் எதிரி திரும்ப திரும்ப அதே மாதிரியே மிரட்டிக் கொண்டிருந்தார். SI மேடம் ராஜேஷையும் என்னையும் கூப்பிட்டு அந்த பையனை காவல் நிலையத்திற்கு அழைத்து வரச்சொன்னார். நாங்கள் இருவரும் அவனை காவல் நிலையத்தில் ஆஜர் செய்தோம். ஆஜர் எதிரி ராஜா என்ற ஜான்பீட்டர் தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் SI மேடத்திடம் எங்கள் முன்னிலையில் கொடுத்தான். அதை SI மேடம் தட்டச்சு செய்தார்கள். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் ராஜேஷ்ம் கையெழுத்து போட்டோம். பின்பு எதிரியிடமிருந்து கத்தியை பேருந்து நிலையத்திலே கைப்பற்றி காவல் நிலையத்தில் ஆஜர் செய்தோம். அந்த கைப்பற்றுதல் மகசர் அதசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் கத்தி எதிரி பயன்படுத்தியதுதான். அந்த கத்தி அதசாபொ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரி மீது குற்ற எண். 198/2025, ச/பி. 296(b) of BNS r/w 25(1A) Arms Act ன்படி வழக்கு பதிவு செய்ய உதவி ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். இது சம்பந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை**

காவல் நிலைத்தின் பொறுப்பு அதிகாரி SI மேடம் தான். எதிரியின்

முகவரி கலைஞர் காலனி. எதிரி இருக்கும் முகவரியில் இதற்கு முன்பு எதாவது பிரச்சனை ஏற்பட்டுள்ளதா என்றால் ஏற்பட்டுள்ளது. எதிரியை புதிய பேருந்து நிலையத்தில் கைது செய்யவில்லை என்றும் எதிரிக்கும் வழக்கு சம்பவத்திற்கும் சம்பந்தமில்லை என்றும் அதிகாலை 4.00 மணிக்கு புள்ளிவிவரக்கணக்கிற்காக எதிரியை கைது செய்திருக்கிறோம் என்றால் சரியல்ல. எதிரி எந்தவித ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும் ஒப்புதல் வாக்குமூலம் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் கத்தி பொது சந்தையில் கிடைப்பதை பெற்றுக்கொண்டு சான்று பொருளாக வழக்கில் தாக்கல் செய்தோம் என்றால் சரியல்ல. பொது நபர்கள் யாரும் புகார் கொடுக்காத காரணத்தை சொல்லியுள்ளோமா என்றால் இல்லை. புகார் கொடுக்காததற்கு யாரையாவது அழைப்பாணை அனுப்பி விசாரித்தோமா என்றால் இல்லை. சட்டமுறைகளை நாங்கள் கைப்பற்றவில்லை என்றும் அதனால் தான் எதிரியை வீட்டிலிருந்து கைது செய்தோம் என்றால் சரியல்ல. இந்த வழக்கின் புகார்தாரரும் புலன்விசாரணை அதிகாரியும் ஒருவரே என்றால் சரிதான். என் மேலதிகாரிக்கு அனுசரணையாக அவரின் உத்தரவின்பேரில் எதிரிக்கு எதிராக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ இடத்திற்கே செல்லாமல் சம்பவ இடத்திற்கு சென்றதாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து, மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

சாட்சிய வாக்குமூலம்

மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:- திருமதி. இரா. சத்யதாரா, எம்.ஏ., எம்.எல்.,

அமர்வு வழக்கு எண் 88 /2025

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 3 (LW –4 ) | நாள் | 17.07.2026 |
| பெயர் | ராஜேஷ் | வயது | 34 |
| தந்தை பெயர் | ராஜசேகர் | ஊர் | நிம்மேலி கங்காதரபுரம் |

(குற்றம் சாட்டப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சாட்டப்பட்ட நபர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

சாட்சி அழைக்கப்பட்டு திரு. T. ரவிசங்கர், இருக்கை எழுத்தர் நிலை – 1 என்பவரால் சத்யபிரமாணம் செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது மயிலாடுதுறை காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். 17.03.2025 தேதியில் காலை 9.00 மணிக்கு நானும் முதல் நிலை காவலர் சதீஷ்குமார், உதவி ஆய்வாளர் பிரியங்கா ரோந்து பணிக்காக மயிலாடுதுறை புதிய பேருந்து நிலையம் அருகே சென்ற போது ஆஜர் எதிரி கையில் கத்தியை வைத்துக்கொண்டு ஆபாசமான வார்த்தைகளால் அங்கிருந்த கடைக்காரர்களையும் பொதுமக்களையும் திட்டிக்கொண்டிருந்தார். SI மேடம் பொது இடத்தில் இப்படி பேசகூடாது பிரச்சனை செய்யகூடாது என்று சொன்னார்கள். ஆஜர் எதிரி திரும்ப திரும்ப அதே மாதிரியே மிரட்டிக் கொண்டிருந்தார். SI மேடம் சதீஷ்குமாரையும் என்னையும் கூப்பிட்டு அந்த பையனை காவல் நிலையத்திற்கு அழைத்து வரச்சொன்னார். நாங்கள் இருவரும் அவனை காவல் நிலையத்தில் ஆஜர் செய்தோம். ஆஜர் எதிரி ராஜா என்ற ஜான்பீட்டர் தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் SI மேடத்திடம் எங்கள் முன்னிலையில் கொடுத்தான். அதை SI மேடம் தட்டச்சு செய்தார்கள். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் சதீஷ்குமாரும் கையெழுத்து போட்டோம். பின்பு எதிரியிடமிருந்து கத்தியை பேருந்து நிலையத்திலே கைப்பற்றி காவல் நிலையத்தில் ஆஜர் செய்தோம். அந்த கைப்பற்றுதல் மகசர் அதசாஆ 1 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டது. என்னிடம் காட்டப்படும் கத்தி எதிரி பயன்படுத்தியதுதான். அந்த கத்தி அதசாபொ 1 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரி மீது குற்ற எண். 198/2025, ச/பி. 296(b) of BNS r/w 25(1A) Arms Act ன்படி வழக்கு பதிவு செய்ய உதவி ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். இது சம்பந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை**

காவல் நிலைத்தின் பொறுப்பு அதிகாரி SI மேடம் தான். எதிரியின்

முகவரி கலைஞர் காலனி. எதிரி இருக்கும் முகவரியில் இதற்கு முன்பு எதாவது பிரச்சனை ஏற்பட்டுள்ளதா என்றால் ஏற்பட்டுள்ளது. எதிரியை புதிய பேருந்து நிலையத்தில் கைது செய்யவில்லை என்றும் எதிரிக்கும் வழக்கு சம்பவத்திற்கும் சம்பந்தமில்லை என்றும் அதிகாலை 4.00 மணிக்கு புள்ளிவிவரக்கணக்கிற்காக எதிரியை கைது செய்திருக்கிறோம் என்றால் சரியல்ல. எதிரி எந்தவித ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும் ஒப்புதல் வாக்குமூலம் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் கத்தி பொது சந்தையில் கிடைப்பதை பெற்றுக்கொண்டு சான்று பொருளாக வழக்கில் தாக்கல் செய்தோம் என்றால் சரியல்ல. பொது நபர்கள் யாரும் புகார் கொடுக்காத காரணத்தை சொல்லியுள்ளோமா என்றால் இல்லை. புகார் கொடுக்காததற்கு யாரையாவது அழைப்பாணை அனுப்பி விசாரித்தோமா என்றால் இல்லை. சட்டமுறைகளை நாங்கள் கைப்பற்றவில்லை என்றும் அதனால் தான் எதிரியை வீட்டிலிருந்து கைது செய்தோம் என்றால் சரியல்ல. இந்த வழக்கின் புகார்தாரரும் புலன்விசாரணை அதிகாரியும் ஒருவரே என்றால் சரிதான். என் மேலதிகாரிக்கு அனுசரணையாக அவரின் உத்தரவின்பேரில் எதிரிக்கு எதிராக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ இடத்திற்கே செல்லாமல் சம்பவ இடத்திற்கு சென்றதாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்து சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட ...
மயிலாடுதுறை